ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ மாற்றரசர் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மாற்றரசர் ॥

## திருநாங்கூர்த் திருத்தெற்றியம்பலம்

‡மாற்றரசர் மணி முடியும் திறலும் தேசும்⋆
மற்றவர் தம் காதலிமார் குழையும்⋆ தந்தை
கால் தளையும் உடன் கழல வந்து தோன்றிக்⋆
கத நாகம் காத்தளித்த கண்ணர் கண்டீர்⋆
நூற்றிதழ் கொள் அரவிந்தம் நுழைந்த பள்ளத்து⋆
இளங்கமுகின் முது பாளை பகு வாய் நண்டின்⋆
சேற்றளையில் வெண் முத்தம் சிந்து நாங்கூர்த்⋆
திருத்தெற்றியம்பலத்தென் செங்கண் மாலே (1)

பொற்றொடித் தோள் மட மகள் தன் வடிவு கொண்ட⋆
பொல்லாத வன் பேய்ச்சி கொங்கை வாங்கி⋆
பெற்றெடுத்த தாய் போல மடுப்ப⋆ ஆரும்
பேணா நஞ்சுண்டுகந்த பிள்ளை கண்டீர்⋆
நெல் தொடுத்த மலர் நீலம் நிறைந்த சூழல்⋆
இருஞ்சிறைய வண்டொலியும் நெடுங்கணார் தம்⋆
சிற்றடிமேல் சிலம்பொலியும் மிழற்று நாங்கூர்த்⋆
திருத்தெற்றியம்பலத்தென் செங்கண் மாலே (2)

படல் அடைத்த சிறு குரம்பை நுழைந்து புக்குப்⋆
பசு வெண்ணெய் பதம் ஆரப் பண்ணை முற்றும்⋆
அடல் அடர்த்த வேற் கண்ணார் தோக்கை பற்றி⋆
அலந்தலைமை செய் துழலும் ஐயன் கண்டீர்⋆
மடல் எடுத்த நெடுந் தெங்கின் பழங்கள் வீழ⋆
மாங்கனிகள் திரட்டுருட்டா வரு நீர்ப் பொன்னி⋆
திடல் எடுத்து மலர் சுமந்தங்கிழியும் நாங்கூர்த்⋆
திருத்தெற்றியம்பலத்தெந் செங்கண் மாலே (3)

www.prapatti.com

வாராரும் முலை மடவாள் பின்னைக்காகி⋆
    வளை மருப்பில் கடுஞ்சினத்து வன் தாளார்ந்த⋆
காரார் திண் விடை அடர்த்து வதுவை ஆண்ட⋆
    கரு முகில் போல் திரு நிறத்தென் கண்ணர் கண்டீர்⋆
ஏராரும் மலர்ப் பொழில்கள் தழுவி எங்கும்⋆
    எழில் மதியைக் கால் தொடர விளங்கு சோதி⋆
சீராரு மணி மாடம் திகழும் நாங்கூர்த்⋆
    திருத்தெற்றியம்பலத்தென் செங்கண் மாலே (4)

கலை இலங்கும் அகல் அல்குல் கமலப் பாவை⋆
    கதிர் முத்த வெண் நகையாள் கருங்கண் ஆய்ச்சி⋆
முலை இலங்கும் ஒளி மணிப் பூண் வடமும் தேய்ப்ப⋆
    மூவாத வரை நெடுந் தோள் மூர்த்தி கண்டீர்⋆
மலை இலங்கு நிரைச் சந்தி மாட வீதி⋆
    ஆடவரை மட மொழியார் முகத்து⋆ இரண்டு
சிலை விலங்கி மனஞ்சிறை கொண்டிருக்கும் நாங்கூர்த்⋆
    திருத்தெற்றியம்பலத்தென் செங்கண் மாலே (5)

தான் போலும் என்றெழுந்தான் தரணியாளன்⋆
    அது கண்டு தரித்திருப்பான் அரக்கர் தங்கள்⋆
கோன் போலும் என்றெழுந்தான் குன்றம் அன்ன⋆
    இருபது தோளுடன் துணித்த ஒருவன் கண்டீர்⋆
மான் போலும் மென் நோக்கின் செய்ய வாயார்⋆
    மரகதம் போல் மடக்கிளியைக் கைமேல் கொண்டு⋆
தேன் போலும் மென் மழலை பயிற்றும் நாங்கூர்த்⋆
    திருத்தெற்றியம்பலத்தென் செங்கண் மாலே (6)

பொங்கிலங்கு புரி நூலும் தோலும் தாழப்⋆
    பொல்லாத குறள் உருவாய்ப் பொருந்தா வாணன்⋆
மங்கலம் சேர் மறை வேள்வி அதனுள் புக்கு⋆
    மண் அகலம் குறை இரந்த மைந்தன் கண்டீர்⋆
கொங்கலர்ந்த மலர்க் குழலார் கொங்கை தோய்ந்த⋆
    குங்குமத்தின் குழம்பளைந்த கோலந் தன்னால்⋆

செங்கலங்கல் வெண் மணல்மேல் தவழும் நாங்கூர்த்⋆
    திருத்தெற்றியம்பலத்தென் செங்கண் மாலே (7)

சிலம்பின் இடைச் சிறு பரல் போல் பெரிய மேரு⋆
    திருக் குளம்பில் கணகணப்பத் திருவாகாரம்
குலுங்க⋆ நில மடந்தை தனை இடந்து புல்கிக்⋆
    கோட்டிடை வைத்தருளிய எம் கோமான் கண்டீர்⋆
இலங்கிய நான் மறை அனைத்தும் அங்கம் ஆறும்⋆
    ஏழ் இசையும் கேள்விகளும் எண் திக்கெங்கும்⋆
சிலம்பிய நற் பெருஞ்செல்வம் திகழும் நாங்கூர்த்⋆
    திருத்தெற்றியம்பலத்தென் செண் கண் மாலே (8)

ஏழ் உலகும் தாழ் வரையும் எங்கும் மூடி⋆
    எண் திசையும் மண்டலமும் மண்டி⋆ அண்டம்
மோழை எழுந்தாழி மிகும் ஊழி வெள்ளம்⋆
    முன் அகட்டில் ஒடுக்கிய எம் மூர்த்தி கண்டீர்⋆
ஊழிதொறும் ஊழிதொறும் உயர்ந்த செல்வத்து⋆
    ஓங்கிய நான்மறை அனைத்தும் தாங்கு நாவர்⋆
சேழ் உயர்ந்த மணி மாடம் திகழும் நாங்கூர்த்⋆
    திருத்தெற்றியம்பலத்தென் செங்கண் மாலே (9)

‡சீர் அணிந்த மணி மாடம் திகழும் நாங்கூர்த்⋆
    திருத்தெற்றியம்பலத்தென் செங்கண் மாலை⋆
கூர் அணிந்த வேல் வலவன் ஆலி நாடன்⋆
    கொடி மாட மங்கையர் கோன் குறையல் ஆளி⋆
பார் அணிந்த தொல் புகழான் கலியன் சொன்ன⋆
    பாமாலை இவை ஐந்தும் ஐந்தும் வல்லார்⋆
சீர் அணிந்த உலகத்து மன்னர் ஆகிச்⋆
    சேண் விசும்பில் வானவர் ஆய்த் திகழ்வர் தாமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com